**செ.வெ.எண்-12** **நாள்-05.03.2020**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டம், செந்துறை அண்ணாநகரில் அமைந்துள்ள மின்சார வாரிய அலுவலகக் கட்டிடத்தில் உதவி மின் செயற்பொறியாளர் அலுவலகக் கட்டிடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் திறந்து வைத்தார்கள்.

செந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மின்சார வாரிய அலுவலகத்தில் ரூ.19.2 இலட்சம் மதிப்பில் உதவி மின் செயற்பொறியாளர் கட்டிடம் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தில் உதவி மின் செயற்பொறியாளர் அறை, தளவாடங்கள் அறை, பணம் செலுத்தும் இடம் ஆகிய அறைகள் உள்ளன. பொதுமக்களுக்கு தேவையான வசதிகள் இக்கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், ஒன்றியக்குழுத் தலைவர் தேன்மொழி, மேற்பார்வை பொறியாளர் கருப்பையா, செயற்பொறியாளர்கள் சேகர், செல்வராஜ், உதவி செயற்பொறியாளர் ராஜேந்திரன், ஆதனக்குறிச்சி கூட்டுறவு சங்கத்தலைவர் சுரேஷ், வட்டாட்சியர் தேன்மொழி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**